05-03-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 10.01.1994

## ஒரு புள்ளி (பாயின்ட்) என்ற சொல்லை மூன்று ரூபங்களில் ஸ்மிருதி மற்றும் சொரூபத்தில் கொண்டு வருவது தான் பாதுகாப்பிற்கான சாதனம்

விஷ்வ கல்யாண்காரி பாப்தாதா தம்முடைய மாஸ்டர் விஷ்வ கல்யாண்காரி குழந்தைகள் அனைவரையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த பிராமண வாழ்க்கையின் லட்சியம் மிக உயர்ந்ததாகும். ஒவ்வொருவரும் நம்பர் ஒன் புருஷார்த்தம் செய்வதற்கான லட்சியம் வைத்து முன்னால் பறந்து சென்று கொண்டே இருக்கிறார்கள். லட்சியம் அனைவருக்கும் நம்பர் ஒன் என்பது தான். ஆனால் லட்சணம் நம்பர்வார் உள்ளது. ஆக, லட்சியம் லட்சணம் இரண்டிலும் வித்தியாசம் ஏன்? ஞான வள்ளல் பாபாவும் ஒருவர் தாம். யோகத்தின் விதியும் ஒன்று தான். தெய்வீக குண தாரணைக்கான பிரத்தியட்ச பிரமாணமாகிய சாகார் பிரம்மா பாபாவும் ஒருவர் தான். சேவைக் கான சாதனம் மற்றும் சேவைக்கான விதியைக் கற்றுத் தருபவரும் ஒருவர் தான். முக்கிய விஷயம் - படிப்பு மற்றும் பாலனை - இரண்டையும் தருபவர் ஒருவர் மற்றும் ஒரு நம்பர். பிறகும் கூட பிரத்தியட்ச வாழ்க்கையில் லட்சணம் நம்பர்வார் இருப்பது ஏன்? இதையோ அனைவருமே சுயம் நல்லபடியாக அறிந்து கொண்டிருக்கிறீர்கள் - லட்சணத்தை தாரணை செய்வதில் எந்த நம்பரில் நாம் இருக்கிறோம்? நம்பர்வார் இருப்பதற்கான விசேஷ ஆதாரம் ஒரே ஒரு சொல் - பாயின்ட். பாயின்ட் சொரூபத்தை அனுபவம் செய்ய வேண்டும். இரண்டாவது, எந்த ஒரு சங்கல்பம், வார்த்தை அல்லது கர்மம் வீணானதாக இருந்தால் அதற்குப் புள்ளி (பாயின்ட்) வைக்க வேண்டும். அதாவது பிந்தி வைக்க வேண்டும். மூன்றாவது ஞானத்திற் கான அல்லது தாரணைக்கான அநேக பாயின்ட்டுகளை மனனம் செய்து தனக்காக மற்றும் சேவைக்காக சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். ஆக, சொல் ஒரே ஒரு பாயின்ட் தான். ஆனால் மூன்று சொரூபங்களின் பாயின்ட்டை சமயத்தில் ஸ்மிருதியில், கொண்டு வருவது - இதில் வித்தியாசம் வந்து விடுகிறது. ஸ்மிருதி அனைவருக்குமே இருக்கிறது. ஆனால் ஸ்மிருதியை சொரூபத்தில் கொண்டு வருவதில் நம்பர்வார் ஆகி விடுகின்றனர். அநேக தடவை பாப்தாதா குழந்தைகள் அனைவரையும் பார்க்கிறார் - ஸ்மிருதியில் மிகவும் புத்திசாலியாக உள்ளனர். இப்படி இருக்க வேண்டும் என யோசித்துக் கொண்டும் இருக்கின்றனர் - இது சரி, இது தப்பு என்ற ஞானமும் வெளிப்படுகிறது. ஞானம் என்றால் நாலெட்ஜ். நாலெட்ஜ் இஸ் லைட், நாலெட்ஜ் இஸ் மைட் என்று சொல்லப்படுகிறது. ஆக, எங்கே ஒளியும் உள்ளதோ, அங்கே சக்தியும் உள்ளது. அங்கே இது இப்படித் தான் இருக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கக் கூடாது. என்ன யோசிக் கின்றனர் என்றால், பாப்தாதா இதைச் சொல்லவோ செய்கிறார், ஆகவோ வேண்டும், ஞானமோ இது தான். ஆனால் அந்தச் சமயத்தில் எனக்குள் என்ன இருக்கிறது என்றால், அது வேண்டும், வேண்டும் என்பதிலேயே இருந்து விடுகிறது. இதன் அர்த்தம் - ஞானத்தை ஒளி மற்றும் சக்தியின் ரூபத்தில் சமயத்திற்கேற்றவாறு காரியத்தில் ஈடுபடுத்த முடிவதில்லை. இதைத் தான், ஸ்மிருதியில் உள்ளது, ஆனால் சொரூபத்தில் கொண்டு வருவதற்கான சக்தி குறைவு என்று சொல்வது. எப்போது ஒளி அல்லது பிரகாசம் உள்ளதோ -

அதாவது இது தவறு, இது சரி, இது இருள், இது பிரகாசம், இது வீணானது, இது சக்திசாலி, என்றால் இருள் எனப் புரிந்திருந்தும் இருளிலேயே இருப்பது - இதை ஞானி அல்லது புத்திசாலி எனச் சொல்வார்களா? ஞானி இல்லை என்றால் என்னவாக ஆகிறீர்கள்? பக்தரா அல்லது அறைகுறை ஞானியா? தவறு எனப் புரிந்து கொண்டிருந்த போதும் கர்மங்களின், அல்லது சங்கல்பங்களின், அல்லது சுபாவ-சம்ஸ்காரங்களின் வசமாகி விட்டால் இதை என்னவென்று சொல்வார்கள்? அவர்களின் டைட்டில் என்னவாக இருக்க வேண்டும்? சமயத்தின் வேகத்தைப் பார்த்து பாப்தாதா குழந்தைகள் அனைவரின் கவனத்தையும் அடிக்கடி ஈர்த்துக் கொண்டிருக்கிறார்.

கவனம் என்ற சொல்லையும் இரட்டை அடிக்கோடிட (டபுள் அண்டர்லைன்) வைத்துக் கொண்டிருக்கிறார் - இந்த இயற்கையின் தமோகுணி சக்தி மற்றும் மாயாவின் சூட்சும ராயல் புத்திசாலித்தனத்தின் சக்தி தனது காரியத்தைத் தீவிர வேகத்தில் செய்து கொண்டிருக்கிறது மற்றும் செய்து கொண்டே இருக்கும். இயற்கையின் பயங்கர ரூபத்தை அறிந்து கொள்வது சுலபம். ஆனால் பல்வேறு பயங்கரக் குழப்பங்களில் அசையாமல் இருப்பதில் இன்னும் கவனம் தேவை. மாயாவின் சூட்சும சொரூபத்தை அறிந்து கொள்வ திலும் தோற்றுப் போகிறார்கள். மாயா அந்த மாதிரி ராயல் ரூபத்தை வைத்திருக்கிறது. அதனால் தவறானதை சரி என்று அனுபவம் செய்விக்கிறது. முற்றிலும் தவறானது தான், ஆனால் புத்தியை அந்த மாதிரி மாற்றி விடுகிறது - உண்மையான புரிதலை, உணரும் சக்தியை மறைத்து விடுகிறது. எப்படி யாராவது மாய மந்திரம் செய்கிறார்கள் இல்லையா, அப்போது வேறு வசமாகி விடுகிறார்கள். அது போல் உணரும் சக்தியை மறைப்பதற்கான ராயல் மாயா உண்மையைப் புரிந்து கொள்ள விடாது. முற்றிலும் தவறான தாகவே இருக்கும். ஆனால் மாயாவின் நிழல் வசமாகி விட்ட காரணத்தால் தவற்றைச் சரி எனப் புரிந்து, அதை நிரூபிப்பதற்காக சுப்ரீம் கோர்ட் வக்கீல் ஆகி விடுகிறார்கள். ஆக, வக்கீல்கள் என்ன செய்கிறார்கள்? பொய்யை உண்மை என நிரூபிப்பதில் சாமர்த்தியசாலி ஆகிறார்கள். உண்மையை உண்மை என நிரூபிப்பதிலும் இருக்கிறார்கள். ஆனால் பொய்யை உண்மை என நிரூபிப்பதில் சாமர்த்தியசாலியாக இருக்கிறார்கள். இரண்டிலும் சாமர்த்தியசாலியாக இருக்கிறார்கள். எனவே பாப்தாதா கவனமாக இருக்க வேண்டும் என்பதை இரட்டை அடிக்கோடிடச் செய்து கொண்டிருக் கிறார். உணரும் சக்தியை மாற்றுவதற்கான சூட்சும சொரூபத்தின் மாயாவின் நிழலில் இருந்து தன்னை சதா பாதுகாப்பாக வையுங்கள். ஏனென்றால் விசேஷ மாயாவின் சொரூபம் விசேஷமாக இந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறது. புரிந்ததா? இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? கவனமாக இருக்க வேண்டும். யாராவது விசேஷ ஆத்மாக்கள் சமிக்ஞை செய்கிறார்கள் என்றால் நல்லபடியாக இந்த மாயாவின் நிழலில் இருந்து வெளியில் வந்து பாபாவின் குடைநிழலில் தன்னை, விசேஷமாக மனம்-புத்தியை இந்தக் குடைநிழலின் ஆதரவில் கொண்டு வாருங்கள். ஏனென்றால் மனதில் நெகட்டிவ் உணர்வு மற்றும் பாவனையை உருவாக்குவதற்காக விசேஷமாக மாயாவின் பிரபாவம் நடந்து கொண்டிருக்கிறது. மேலும் புத்தியில் யதார்த்த உணர்வை முடித்து விடுவதற்கான விசேஷ மாயாவின் காரியம் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. எப்படி ஏதாவது சீசனாக இருக்கிறது என்றால் சீசனிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக விசேஷ கவனம் வைக்கப்படுகிறது. எப்படி மழை

வருகிறது என்றால் குடை, மழைக் கோட்டு முதலிய கவனம் வைக்கிறீர்கள். குளிர்காலம் வந்தால் வெப்பமான ஆடை வைத்துக் கொள்கிறீர்கள், கவனம் கொடுப்பீர்கள் இல்லையா? ஆக, மனம்-புத்தியின் மீது பிரபாவம் ஏற்படாதிருக்க முதலில் பாதுகாப்பிற்கான சாதனத்தை விசேஷமாகத் தனதாக்கிக் கொள்ளுங்கள். அந்த விசேஷ சாதனம், மிகவும் சுலபம், முதலிலேயே சொல்லப் பட்டுள்ளது -- ஒரே ஒரு பாயின்ட் என்ற சொல். சுலபம் தான் இல்லையா? மிக நீளமாக எதுவும் சொல்லவில்லை இல்லையா? சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். ஆம், நான் ஆத்மா பிந்து, ஜோதி ரூபம். ஆனால் அதில் நிலைத்திருப்பதில்லை. புள்ளி வைக்க விரும்புகிறார்கள். ஆனால் கேள்விக்குறி மற்றும் ஆச்சரியக்குறியின் அடையாளம் ஆகி விடுகிறது. புள்ளி வைப்பது சுலபமா அல்லது ஆச்சரிக்குறியின் அடையாளம் அல்லது கேள்விக்குறியின் அடையாளமா? எது சுலபம்? புள்ளி வைப்பது தான் சுலபம் இல்லையா? பிறகு கேள்விக்குறி அல்லது ஆச்சரியத்தில் ஏன் சென்று விடுகிறீர்கள்? இந்த விதியைத் தனதாக்கிக் கொள்ளுங்கள். இப்போது சீசனே அந்த மாதிரி உள்ளது - பொய்யை உண்மை என நிரூபிப்பதற் கானதாக, மற்றும் பொய்யானது சத்தியத்தை விடவும் தெளிவாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கும். எப்படி இன்றைய ஃபேஷன் உள்ளது இல்லையா, பொய்யான, போலியான பொருள் எவ்வளவு கவர்ச்சிகரமாக உள்ளது! அதற்கு முன்னால் உண்மையான பொருளின் மதிப்பு குறைந்து விடுகிறது. உண்மையான வெள்ளி பாருங்கள், வெள்ளையான செயற்கை வெள்ளியையும் பாருங்கள், எது அழகாகத் தோன்று கிறது? உண்மையான வெள்ளி கருத்துப் போகும். ஆனால் செயற்கை வெள்ளி சதா ஜொலித்துக் கொண்டிருக்கும். ஆக, கவர்வது செயற்கையா அல்லது உண்மையான வெள்ளியா? ஆக, சீசனை அறிந்து கொள்ளுங்கள். இயற்கையின் தமோகுணத் தினுடைய விதவிதமான வண்ணங்களை அறிந்து கொள்ளுங்கள். ஒன்று அறிவது, இன்னொன்று உணர்ந்து கொள்வது அல்லது அடையாளம் கண்டு கொள்வது. அதிகம் அறிந்திருக்கிறீர்கள். உணர்ந்து கொள்வதில் சில நேரம் தவறிழைத்து விடுகிறீர்கள். சில நேரம் சரியாக நடந்து கொள்கிறீர்கள். இப்போது என்ன செய்வீர்கள்? பாதுகாப்பாக இருப்பீர்கள் இல்லையா? பிறகு இப்படிச் சொல்லக் கூடாது - நானோ புரிந்து கொள்ளவில்லை, இப்படியும் நடக்குமா என்ன? இந்த என்ன-என்ன என்பது செல்லுபடியாகாது. இப்போதோ பாபா கொஞ்சம் இரக்கம் காட்டுகிறார். கொஞ்சம் அடியெடுத்து வைப்பதற்கு உதவி செய்கிறார். பிறகு என்ன, ஏன் என்பதை யாரும் கேட்க மாட்டார்கள். இப்படி இல்லை, அப்படி இந்த வக்காலத்து செல்லுபடியாகாது. நீதிபதி ஆகுங்கள். வக்கீல் ஆகாதீர்கள். வக்காலத்து செய்யும் போது மஜா அதிகம் வருகிறது. அனைவருமே அனுபவி தான் இல்லையா? அனுபவம் ஏற்படுகிறது இல்லையா? கேட்கக்கேட்க சாட்சியாகி இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். நல்லபடியாகப் புரிந்து கொண்டீர்களா? பாண்டவர்கள், சக்திகள் புரிந்து கொண்டீர்களா, டீச்சர்கள் புரிந்து கொண்டீர்களா? அனைவரும் ஆம், ஆம் என்றோ சொல்கின்றனர். ஆம் என்று சொல்கிறவர்கள் படம் பிடிக்கப் படுகிறார்கள்.

மூன்றாவது சீசன் விசேஷமாக பலவீனங்களின் சுபாவ-சம்ஸ்காரம், சம்பந்தம்-தொடர்பில் வருவது, இதன் விஸ்தாரமும் மிகப்பெரியது. அதை இன்று சொல்ல மாட்டோம். அநேக குழந்தைகள் சொல்கிறார்கள் - முன்பு இது போல் இருந்ததில்லை. இப்போது என்னவாயிற்று என்று தெரியவில்லை. இதற்கான

காரணம் மற்றும் இதற்கான விதியின் விஸ்தாரம் பற்றிப் பின்னால் ஒரு முறை சொல்வோம். நல்லது.

நாலாபுறமும் உள்ள, பாப்தாதாவின் மகாவாக்கியங்களைக் கேட்கிற மற்றும் தாரணை செய்யக் கூடிய சாதகப் பட்சிகளாகிய குழந்தைகளுக்கு, அனைத்துப் பாடங்களையும் ஸ்மிருதியுடன் கூடவே சொரூபத்தில் கொண்டுவரக் கூடிய சமீப ஆத்மாக்களுக்கு, சதா ஞானத்தின் ஒவ்வொரு விஷயத்தையும் ஒளி, சக்தியின் சொரூபத்தின் மூலம் காரியத்தில் கொண்டுவரக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக்கக்கூடிய, பாபாவின் ஞானம் நிறைந்த ஆத்மாக்களாகிய குழந்தைகளுக்கு, சதா பாபாவின் குடைநிழலில் இருக்கக்கூடிய, மாயாவின் நிழலில் இருந்து பாதுகாப்பாக இருக்கக் கூடிய, அறிநது கொள்ளுதல் மற்றும் உணர்ந்து கொள்ளுதல் என்ற இரண்டு விசேஷ தன்மைகளையும் வாழ்க்கையில் கொண்டுவரக் கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

தாதிகளோடு சந்திப்பு: சக்தி சேனை தீவிர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது இல்லையா? சேனையை பாப்தாதாவோடு கூடவே நிமித்த ஆத்மாக்களாகிய நீங்களும் நடத்துவதற்கு நிமித்தமாக இருக்கிறீர்கள். பாபாவோ எப்போதும் கூடவே இருக்கிறார் மற்றும் சதா கூடவே இருப்பார். பிறகும் பாப்தாதாவின் சிரேஷ்ட புஜங்களாகவோ இருக்கிறீர்கள் இல்லையா? பாபா சக்தி (மைட்) கொடுக்கிறார். பாபா சக்தி ரூபத்தில் இருக்கிறார். ஆனால் நிமித்தமாக இருந்து புரிய வைப்பதற்காக மைக்காக நீங்களோ நிமித்தமாக இருக்கிறீர்கள். எவ்வளவு மகிழ்ச்சியின் விஷயங்கள் கேட்கிறீர்கள்! விளையாட்டு எனத் தோன்றுகிறது இல்லையா? விளையாட்டு இல்லையா? விளையாட்டிலேயே வெற்றியாளர் ஆகி அனைவரையும் மாயாஜீத் வெற்றியாளர் ஆக்கத் தான் வேண்டும். இதுவோ உறுதி. ஆனால் இடையிடையில் இந்த விளையாட்டைப் பார்க்க வேண்டி உள்ளது. ஆக, நீங்கள் களைத்துப் போகவோ இல்லை தானே? சிரித்துக் கொண்டு, விளையாடிக் கொண்டு, கடந்து சென்று கொண்டு, செல்ல வைத்தக் கொண்டே செல்கிறீர்கள். யாராவது இத்தகைய விஷயங்களைக் கேட்டால் மனதிலிருந்து என்ன வெளிப்படும்? ஆஹா டிராமா ஆஹா! ஐயோ டிராமா ஐயோ என்று வெளிப்படாது. ஆஹா டிராமா! ஆஹா ஆஹா என்று சொல்லிக் கொண்டே அனைவரையும் ஆஹா ஆஹா என்று ஆக்கத் தான் வேண்டும். இவை அனைத்தையும் கடந்து சென்று தான் ஆக வேண்டும். நல்லது.

அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு வெற்றி நமது பிறப்புரிமை - இந்த நிச்சயம் மற்றும் நஷா மூலம் தடையற்ற ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

எப்படி உயர்ந்தவரிலும் உயர்ந்த பாபாவோ, அது போல் ஆத்மாக்கள் நாமும் உயர்ந்தவரிலும் உயர்ந்த சிரேஷ்ட ஆத்மாக்கள் - இந்த அனுபவம் செய்து கொண்டே செல்கிறீர்களா? ஏனென்றால் உலகத்தவர்க்கோ அனைவரிலும் உயர்ந்தவரிலும் உயர்ந்த தந்தைக்குப் பிறகு தேவதைகள். ஆனால் தேவதைகளை விடவும் உயர்ந்தவர்கள் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் ஃபரிஸ்தாக் கள் - இதை உலக மனிதர்களுக்குத் தெரியாது. தேவதா பதவியை விட உயர்ந்தது எனச் சொல்ல மாட்டார்கள். உயர்ந்தது இப்போதைய பிராமண ஜென்மமாகும். நீங்கள் தேவதைகளை விடவும் உயர்ந்தவர்கள், ஏன்? அதையோ நல்லபடியாக அறிந்திருக்கிறீர்கள் இல்லையா? தேவதா ரூபத்தில் பாபாவின்

ஞானம் வெளிப் படாது. பரமாத்ம சந்திப்பின் அனுபவம் இந்த பிராமண வாழ்க்கையில் செய்கிறீர்கள், தேவதா வாழ்க்கையில் இல்லை. பிராமணர்கள் தாம் வேதை ஆகின்றனர். ஆனால் இந்தச் சமயம் தேவதா வாழ்க்கையை விடவும் நீங்கள் உயர்ந்தவர்கள் என்றால் அவ்வளவு நஷா சதா இருக்க வேண்டும். எப்போதாவது தான் என்று இல்லை. ஏனென்றால் பாபா அவிநாசி மற்றும் அவிநாசி பாபா தரும் ஞானமும் கூட அவிநாசி. எதை நினைவு படுத்துகிறாரோ, அதுவும் அவிநாசி. எப்போதாவது இல்லை. ஆக, இதை சோதித்துப் பாருங்கள் - சதா இந்த நஷா இருக்கிறதா அல்லது எப்போதாவது தான் இருக்கிறதா? சதா இருந்தால் தான் மகிழ்ச்சி வரும். சில நேரம் இருந்தது, சில நேரம் இல்லை என்றால் சில நேரம் மஜா இருக்கும், சில நேரம் குழம்பிப் போய் இருப்பீர்கள். ஆக, அவ்வப்போது நஷா, அவ்வப் போது குழப்பம் என்று இல்லாமல் சதா இருக்க வேண்டும். எப்படி இந்த சுவாசம் சதா நடைபெறுகிறது இல்லையா? ஒரு விநாடி கூட சுவாசம் நின்று போனால் அல்லது எப்போ தாவது நடந்தால் அதை உயிர்-வாழ்க்கை எனச் சொல்வார்களா? ஆக, இந்த பிராமண வாழ்க்கையில் நிரந்தர மஜாவில் இருக்கிறீர்களா? மஜா இல்லை என்றால் நிச்சயமாகக் குழம்புவீர்கள். ஆக, தாய்மார்கள் சதா மஜாவில் இருக்கிறீர்களா? சக்திகள் இல்லையா நீங்கள்? சாதாரணமானவர்களோ இல்லை, அல்லது வீட்டுக்குச் சென்றால் சாதாரண தாய்மார்களாக ஆகி விடுகிறீர்களா? இல்லை. சதா இது நினைவிருக்க வேண்டும் - நாம் சக்திகள். எல்லைக்குட்பட்ட வரல்ல. எல்லையற்ற விஷ்வகல்யாண்காரிகள். சக்திகள் என்றால் அசுரர்கள் மீது வெற்றி கொள்பவர்கள். சக்திகளை அசுர சம்ஹாரிணி என்றே சொல்கிறார்கள். அதாவது அசுர சம்ஸ்காரங் களை சம்ஹாரம் செய்பவர்கள். ஆக, சக்திகள் அனைவரும் அந்த மாதிரி தைரியசாலிகளா? மற்றும் பாண்டவர்கள் என்றால் வெற்றியாளர்கள். பாண்டவர்கள் ஒரு போதும் இப்படிச் சொல்ல மாட்டார்கள் - விரும்பவில்லை, ஆனால் தோல்வி ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால் அரைக் கல்பமாகத் தோல்வியடைந்தீர்கள். இப்போது வெற்றியடைவதற்கான சமயம் என்றால் வெற்றியின் சமயத்திலும் கூட தோல்வி யடைந்தீர்கள் என்றால் எப்போது வெற்றியாளர் ஆவீர்கள்? எனவே இச்சமயம் சதா வெற்றியாளர். வெற்றி உங்கள் பிறப்புரிமை. உரிமையை யாரும் விட்டுவிட மாட்டார்கள். சண்டை செய்தும் கூட அடைகிறார்கள். ஆனால் இங்கோ சகஜமாகக் கிடைக்கிறது. வெற்றி உங்கள் ஜென்ம-சித்த அதிகாரம். அதிகாரத்தின் நஷா மற்றும் குஷி இருக்கிறது இல்லையா? எல்லைக்குட்பட்ட அதிகாரம் இருந்தால் கூட எவ்வளவு நஷா உள்ளது! பிரதம மந்திரி, நான் பிரதம மந்திரி என்பதை மறந்து விடுவாரா என்ன? தூங்குவார், உண்பார் என்றால், நான் பிரதம மந்திரி என்பதை மறந்து விடுவாரா? ஆக, எல்லைக்குட்பட்ட அதிகாரம் மற்றும் எல்லையற்ற அதிகாரம், எவ்வளவு தான் ஒருவரை மறக்கடித்தாலும் மறக்க முடியாது. மாயாவின் வேலை மறக்க வைப்பது மற்றும் உங்களுடைய வேலை வெற்றியாளர் ஆவது. ஏனென்றால் வெற்றி என்பதென்ன, தோல்வி என்பதென்ன என்ற புரிதல் உள்ளதல்லவா? தோல்வியின் அனுபவி என்பதோடு வெற்றியின் அனுபவியாகவும் இருக்கிறீர்கள். ஆக, தோல்வியடைந்ததால் என்னாயிற்று, வெற்றியடைந்ததால் என்னாயிற்று? இரண்டிற்குமிடை யிலுள்ள வேறுபாட்டை அறிவீர்கள். எனவே சதா வெற்றியாளர், இனியும் சதா வெற்றியாளராகவே இருப்போம். ஏனென்றால் அவிநாசி தந்தை மற்றும் அவிநாசி பிராப்திக்கு அதிகாரி நாம் ஆத்மாக்கள். இது சதா இமர்ஜ் ரூபத்தில் இருக்கட்டும். இப்படி இல்லையென்றாலோ! ஆகியோ இருக்கிறோம்! தெரிந்தோ இருக்கிறோம்! அந்த

மாதிரி இல்லை. நடைமுறையில் இருக்கிறோம். எதை அறிந்திருக்கிறோமோ, அதையே நிச்சயம் செய்து செல்கிறோம். ஆக, ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியின் நிச்சயம் மட்டும் இருக்கட்டும். நஷாவுக்கு ஆதாரமே நிச்சயம் தான். நிச்சயம் குறைவு என்றால் நஷா குறைவு. அதனால் தான் நிச்சயபுத்தி உள்ளவர் வெற்றி பெறுவார் என்று சொல்லப் படுகிறது. ஆக, அஸ்திவாரம் எது? நிச்சயம். நிச்சயத்தில் அவ்வப்போது என்று ஆகக் கூடாது. இல்லை யென்றால் கடைசியில் ரிசல்ட் சமயத்தில் கூட பிராப்தி அவ்வப்போது என்று ஆகிவிடும். பிறகு பச்சாத்தாபப் பட நேரிடும். இப்போது பிராப்தி உள்ளது. பிறகு பச்சாத்தாபம் ஏற்படும். ஆகவே பிராப்தியின் சமயத்தில் பிராப்தியை அடையுங்கள். பச்சாத்தாபத்தின் சமயத்தில் பிராப்தியை அடைய முடியாது. செய்து விடுவோம், ஆகி விடும் அப்படி இல்லை. செய்தே ஆக வேண்டும் - இந்த நிச்சயம் இருக்க வேண்டும். செய்து விடுவோம் என்ற ஆறுதலோடு செல்ல வேண்டாம். செய்து கொண்டோ இருக்கிறோம் இல்லையா! பிறகு என்னவாகும் ஆகியே விடும் அப்படி இல்லை. இப்போதே ஆக வேண்டும். வோம், வோம் இல்லை. எப்போது மற்றவர்களுக்கு சவால் விடுகிறீர்களோ - சுவாசத்தின் மீது எந்த நம்பிக்கையும் இல்லை. மற்றவர்களுக்கு ஞானம் கொடுக்கிறீர்கள் இல்லையா, அப்போது தனக்கு முதலில் ஞானம் கொடுங்கள். எப்போதாவது செய்கிறவரா அல்லது இப்போதே செய்பவரா? ஆக, சதா வெற்றியின் அதிகாரி ஆத்மாக்கள் நீங்கள். வெற்றி பிறப்புரிமை என்ற ஸ்மிருதியோடு பறந்து செல்லுங்கள். எது நடந்தாலும் சரி, இதை ஸ்மிருதியில் கொண்டு வாருங்கள் - நான் சதா வெற்றியாளன். என்ன தான் நடந்தாலும் சரி, நிச்சயம் என்பது அசையாதது. யாராலும் அசைக்க முடியாதது. நல்லது. இப்போது அனைவரும் அத்தகைய அற்புதம் செய்து காட்டுங்கள் - அதன் மூலம் ஒவ்வோரிடத்திலும் வெற்றியாளர், அதாவது நிர்விக்ன மாகி விட்டது. எந்த ஒரு விக்னமும் வரக்கூடாது. விக்னங்கள் வரும், ஆனால் தோல்வி யடையக் கூடாது. ஆக, எங்கே வெற்றி உள்ளதோ, அங்கே விக்னங்கள் அகன்று விடும். அப்போது நிர்விக்னம் ஆகி விடுவீர்கள். சதா நிர்விக்னம் என்ற அற்புதத்தைச் செய்து காட்டுங்கள். எந்த ஒரு கீதா பாடசாலையாக இருந்தாலும் சரி, உப சேவாகேந்திரமாக இருந்தாலும் சரி, சேவா கேந்திரமாக இருந்தாலும் சரி, சுயம் நிர்விக்னம் ஆகுங்கள், மற்றவர்களையும் நிர்விக்னம் ஆக்குங்கள். அந்த மாதிரி அற்புதத்தைக் காட்டுங்கள். செய்தே ஆக வேண்டும். செய்வோம், பார்ப்போம் இல்லை. வோம் வோம் எனச் சொல்வீர்களானால் நிச்சயத்தில் சதவிகிதம் ஆகி விடுகிறது. அனைவரும் இந்தக் குஷியின் செய்தி கேட்க வேண்டும் - சிறிய-பெரிய சென்டர்கள் அனைத்தும் நிர்விக்னமாக உள்ளன. எந்த விதமான விக்னமும் வரவே முடியாது. மற்றவர்களின் விக்னங்களையும் அழித்து விடுவோம், வெற்றி யாளர் ஆவோம். அந்த மாதிரி செய்தி வர வேண்டும். எங்கிருந்தும் எந்த ஒரு விக்னத்தின் செய்தியும் வரக்கூடாது. நாங்களோ சரியாகத் தான் இருக்கிறோம், அவர்கள் செய்கிறார்கள் நாங்கள் என்ன செய்வது என்று அப்படி இல்லை. மூன்று மாதங்கள் வெற்றியாளராக இருந்து காட்டுங்கள். மூன்று மாதத்திலேயே தெரிந்து விடும். அனைவரும் ஆம் சொல் கிறீர்கள் என்றால் இந்த அற்புதத்தைச் செய்து காட்டுங்கள். நல்லது.

வரதானம் : ஒரு தந்தையின் அன்பில் மூழ்கி இருந்து அனைத்துப் பிரச்சினைகளில் இருந்தும் பாதுகாப்பாக இருக்கக் கூடிய மாயா ப்ரூ்ப் ஆகுக.

எந்தக் குழந்தைகள் ஒரு தந்தையின் அன்பில் மூழ்கி

இருக்கிறார்களோ, அவர்கள் சகஜமாகவே நாலாபுறம் உள்ள வைப்ரேஷனில் இருந்து, வாயுமண்டலத்தில் இருந்து தூர விலகி இருப்பார்கள். ஏனென்றால் மூழ்கி இருத்தல் என்றால் பாப்-சமான் சக்திசாலியாக அனைத்து விஷயங்களிலும் இருந்து பாதுகாப்பாக இருப்பது. மூழ்கி இருத்தல் என்றால் உள்ளடங்கி (நிறைந்து) இருப்பது. யார் நிறைந்து இருக்கிறார்களோ, அவர்கள் மாயா ப்ரூஃப் ஆக இருக்கிறார்கள். இதுவே சகஜ புருஷார்த்தம். ஆனால் சகஜ புருஷார்த்தத்தின் பெயரில் சோம்பேறி ஆகக் கூடாது. சோம்பேறி புருஷார்த்தியின் மனம் உள்ளுக்குள் அரித்துக் கொண்டே இருக்கும். வெளியில் அவர் தனது மகிமையின் பாடலைப் பாடுவார்.

சுலோகன்: மூதாதையர் என்ற நிலையில் நிலைத்திருப்பீர்களானால் மாயா மற்றும் இயற்கையின் பந்தனங்களிவ் இருந்து விடுபட்டு விடுவீர்கள்.